பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 06 2026** **12 40**

வியாழக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**2.** இளையோர் நலனுக்காக எண்ணற்ற வாய்ப்புகளை மத்திய அரசு வழங்கியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

**3.** தமிழகத்தின் நிதி நிலையை மீண்டும் சீரான பாதைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொண்டு வருவதாக மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்துள்ளார்.

**4.** ஹிமாச்சலப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

**5.** மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** மற்றும் **Anmol Kharb** காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள்...

<<<<>>>>

நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இதற்காக கடந்த 12 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்ட திட்டங்களை அவர் பட்டியலிட்டுள்ளார்.

உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகத்தை ஏற்படுத்தியது, உலக சாதனையுடன் மகா கும்பமேளாவை வெற்றிகரமாக நடத்தியது உள்ளிட்டவற்றையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

உலகின் மிக உயரமான சிலை குஜராத்தின் கெவாடியாவில் நிறுவப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் பழமைவாய்ந்த மருத்துவ முறையாக ஆயுர்வேதா திகழ்கிறது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கலாச்சாரத்துறையின் கீழ் இதுவரை இல்லாத அளவுக்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், கடந்த 12 ஆண்டுகளாக கலாச்சாரத் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகளை பட்டியலிட்டுள்ளார்.

அயோத்தி ராமர் கோவில், காசி விஸ்வநாத் வழித்தடம், உஜ்ஜைன் மகா காலேஷ்வர் கோயில் மேம்பாட்டுப் பணிகள் போன்றவை குறிப்பிடத்தக்க சாதனைகளாகும் என்று அவர் கூறியுள்ளார்.

கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஆவணங்கள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட 11 பழங்குடியின தலைவர்களின் அருங்காட்சியகங்கள், வெளிநாடுகளில் இருந்து 660க்கும் மேற்பட்ட புராதன சின்னங்கள் மீட்பு போன்றவையும் சாதனைப் பட்டியலில் அடங்கும் என்று திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<>>>>

இளையோர் நலனுக்காக எண்ணற்ற வாய்ப்புகளை மத்திய அரசு வழங்கியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்வி, திறன்மேம்பாடு, விளையாட்டு, சுகாதாரம், தொழில் ஆகிய துறைகளில் இளையோருக்கு உரிய வாய்ப்புகளை மத்திய அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்பதை கருத்தில்கொண்டு மத்திய அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

நொய்டா சர்வதேச விமான நிலையத்தில் முதலாவது சரக்கு விமானம் தரையிறங்கியுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், சென்னையில் இருந்து இந்த சரக்கு விமானம் நொய்டாவில் தரையிறங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

தோல்பொருட்கள், வாகன உதிரி பாகங்கள் உள்ளிட்டவை இந்த விமானத்தில் கொண்டுவரப்பட்டதாகவம் அவர் கூறினார்.

இந்த விமான நிலையத்தில் வணிகப் பயன்பாட்டிற்கான போக்குவரத்து கடந்த 2 நாட்களுக்கு முன் தொடங்கியதையும் திரு. ராம்மோகன் நாயுடு சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

கேரளாவில் பி.எம். ஸ்ரீ திட்டம் தொடர்பான காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

திரிச்சூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் மூலம் மாணவர்கள் பயனடைவார்கள் என்றார்.

கல்வியில் அரசியலைப் புகுத்தக் கூடாது என்றும் திரு. சுரேஷ் கோபி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தில்லியில் அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இத்தகைய மக்கள் நல முகாமை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

தில்லி முழுவதும் 42 இடங்களில் இந்த முகாம்கள் 3 நாட்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தில்லி மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்வதோடு அதன் பயன்களையும் இந்த முகாம்கள் மூலம் பொதுமக்கள் பெறலாம் என்றும் திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

<<<<>>>>

ஜார்கண்டில் இருந்து மாநிலங்களவைக்கு 2 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலின் வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

இரண்டு பதவியிடங்களுக்கு 3 பேர் போட்டியிடுவதால் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

காலை 9 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 4 மணி வரை நடைபெறும்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை தொடங்கி முடிவுகள் அறிவிக்கப்படும்.

இந்த தேர்தலில் காங்கிரஸ் சார்பில் திரு. **Pranav Jha**-வும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா சார்பில் திரு. **Baidyanath Ram**-ம், பிஜேபி ஆதரவுடன் சுயேச்சை வேட்பாளராக திரு. **Parimalnathwani**-யும் போட்டியிடுகின்றனர்.

<<<<>>>>

தமிழகத்தின் நிதி நிலையை மீண்டும் சீரான பாதைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொண்டு வருவதாக மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தின் நிதி நிலைமை மோசமான சீர்கேட்டை சந்தித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வருவாய் வரவுகளில் ஏற்படும் இழப்புகள் சரிசெய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தவெக அரசு முழுமையாக நிறைவேற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டணி ஆட்சித் தத்துவத்தின் இலக்கணமாக த.வெ.க அரசு திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக அரசியல் வரலாற்றில் இல்லாத அளவிற்கு ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்பதை தவெக அரசு செய்து காட்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்திற்கு உரிய நிதிப் பகிர்வினை மத்திய அரசிடம் கோரும் வகையில் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை சட்ட ரீதியாக பெறுவதற்கு ஏதுவாக சட்ட வல்லுநர்கள் அடங்கிய சிறப்புக் குழு அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

போதைப்பொருள் தடுப்பு சிறப்பு படை மாவட்டம் தோறும் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊழல் முற்றிலுமாக அகற்றப்பட்டு வெளிப்படையான நிர்வாகம் உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

புதிய தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்,

தமிழகத்தின் நதிநீர் உரிமைகள் பாதுகாக்கப்படும்,

நிலையான சுற்றுலாக் கொள்கை வகுக்கப்படும்,

தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும்,

முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஏதுவாக ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்படும்,

அரசுத்துறைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் தேர்வாணையங்கள் மூலம் குறித்த காலத்திற்குள் நிரப்பப்படும்,

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒலிம்பிக் உயர்தர மையங்கள் ஏற்படுத்தப்படும்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வெற்றித் தமிழகம் என்ற தொலைநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் போன்ற அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

நாட்டிலேயே தலைசிறந்த மாநிலமாக தமிழகத்தை உருவாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் சமூகவிரோதிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை பிஜேபி அரசு மேற்கொண்டு வருவதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் ஆற்றிய உரையின்போது அவர் இவ்வாறு கூறினார்.

ஊழல் முற்றிலும் ஒழிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் திரு. ஆர்.என். ரவி கூறினார்.

<<<<>>>>

ஆந்திராவில் அரசு அதிகாரிகள் களப்பணியில் ஈடுபடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

அமராவதியில் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

ஒவ்வொரு அதிகாரியும் மக்களை சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிவதோடு, அவற்றைக் களைவதற்கு உரிய

நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

**Chamba** மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சென்றுகொண்டிருந்த கார் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** மற்றும் **Anmol Kharb** காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் **Ashmita Chaliha 22-20, 21-15** என்ற செட் கணக்கல் அமெரிக்காவின் **Ishika Jaiswal**-ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் மலேசியாவின் **Goh Jin Wei** காயம் காரணமாக போட்டியிலிருந்து

பாதியிலேயே வெளியேறியதை அடுத்து **Anmol Kharb** வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

**<<<<The End>>>>**